**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 499/2021 |
| Deposition of witness for Prosecution | : | P.W–5 |
| Name | : | சீனிவாசன், வயது 49 |
| Father Name/Husband Name | : | ராமையா |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of October 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது சாத்தூர் அரசு மருத்துவமனையில் மூத்த குடிமை மருத்துவராக பணியில் உள்ளேன். கடந்த 10.03.2021 ஆம் தேதி மாரிச்செல்வம் வயது 23, த.பெ. கணேசன், ஸ்டாலின் காலனி, முதல் தெரு, கோவில்பட்டி என்பவர் அடையாளம் தெரிந்த ஒரு நபரால் சுத்தியல் கொண்டு தாக்கப்பட்டதாக இரவு 10.30 மணியளவில் நான் பணியில் இருந்த போது சிகிச்சைக்கு வந்தார்.
2. அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1. 2x2 cm அளவிலான வீக்கக்காயம், இரத்தக்கட்டு காயம் இடது பின் தலையில் இருந்தது. 2. 1x1 cm அளவிலான சிராய்ப்புக்காயம் வலது காலில் இருந்தது. அவருக்கு தேவையான முதல் உதவி சிகிச்சை அளித்தேன்.
3. மேல் சிகிச்சைக்கு தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தேன். அங்கிருந்து பெறப்பட்ட சிகிச்சை விவரங்கள் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்டக்காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். ( **நான் மேற்படி நபருக்கு அளித்த சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. சுத்தியலால் அடித்தால் சிராய்ப்புக்காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் ஆம். காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட வீக்கக்காயத்தில் தடம் எதுவும் இல்லை என்றால் பொதுவாக சுத்தியலால் அடிக்கும் போது இரத்தக்கட்டு ஏற்பட்டு வீக்கம் காணப்படும். போலிசார் உங்களிடம்

சம்பந்தப்பட்ட சுத்தியலை காண்பித்து கருத்துரை பெற்றார்களா என்றால் இல்லை.

2. உங்களிடம் காயம்பட்ட நபர் சுப்பிரமணியாபுரம் மேற்கு தெருவில் வைத்து சம்பவம் நடந்ததாக சொன்னார் என்றால் சரிதான். நீங்கள் குறிப்பிட்டுள்ள காயங்களில் இரத்தக்கசிவு இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இரத்தக்கசிவு இல்லை என்பதால் மேற்படி நபர் காயம்பட்ட தாக சொல்லும் இரண்டு மணிநேரத்திற்கு முன்பாக மேற்படி காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்றால் உண்டு.
3. கொடுங்காயம் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கான விளக்கம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் கொடுங்காயம் என்று அளித்துள்ள கருத்துரை தவறானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.